தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-02

## வினாத்தாள் - I

சுட்டெண்:- ....................................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  - * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
  - * இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
  - * ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
  - * செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

● இலக்கம் (01), (02) ஆகிய வினாக்களில் முதல் உருவுடன் மிகவும் நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.

(01) 


(1) 


(2) 

(3) 

(02) 

(1) 


(2) 


(3) 

(03) முகம் பார்க்கும் கண்ணாடியொன்றினால் பார்க்கும்போது அதே வடிவில் புலப்படும் உருக்களைக் கொண்ட கார்ட்போர்ட் அட்டை,

(1) 


(2) 

(3) 

(04) 


இங்கு A, C என்பவற்றில் வட்டமொன்றும் சதுரமொன்றும் காட்டப்பட்டுள்ளது. இங்கு காட்டப்பட்டுள்ள வடிவங்களில் வரையக்கூடிய சமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை கூடிச்செல்லும் ஒழுங்குமுறையைக் காட்டும் விடை,

(1) D, A, B, C (2) B, D, C, A (3) C, B, D, A


(05) 


ரவி வீட்டிலிருந்து பாடசாலைக்குப் பயணம் செய்த பாதையை இவ்வுரு காட்டுகிறது. ரவி வீட்டிலிருந்து பாடசாலைக்குப் பயணிக்கும்போது அவன் தனது இடது கைப்பக்கத்திற்குத் திரும்பிய தடவைகளின் எண்ணிக்கை,

(1) 2 (2) 1 (3) 3

(06) பின்வரும் மூன்று சொற்சோடிகளில் இரண்டு சொற்சோடிகளின் தொடர்பு சமனானதாகும். அதன்படி, வித்தியாசமான தொடர்புடைய சொற்சோடியைத் தெரிவு செய்க.

(1) பறவைக்கு - ஆகாயம் (2) யானைக்கு - வீதி (3) மீனுக்கு - கடல்


(07) 


நாணயக் குற்றியொன்று மேலே சுண்டிவிடப்பட்டபோது A பக்கத்தை விட B பக்கம் இரண்டு தடவைகள் அதிகமாக விழுந்தது என்பதை அருகே உள்ள வரைபில் காட்டுகின்றது. அதன்படி, நாணயக் குற்றி மேலே சுண்டிவிடப்பட்ட மொத்தத் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 5 (2) 8 (3) 10

(08) 5A வகுப்பிலும் 5B வகுப்பிலும் உள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 34 ஆகும். 5A வகுப்பை விட 5B வகுப்பில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 6 அதிகம் ஆகும். அதன்படி, 5A வகுப்பிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை,


(1) 14 (2) 12 (3) 16

(09) 


இவ்வுருவில் எண்கள் கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுவட்டத்திற்குப் பொருத்தமான எண்,

(1) 36
(2) 10
(3) 25

(10) பின்வரும் ஒவ்வொரு குறியீட்டிற்கும் ஒவ்வொரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. அக்குறியீடுகளின் பெறுமதிகள் ஓர் ஒழுங்குமுறைப்படி எழுதப்படவில்லை.





அதன்படி, ⊠ எனும் குறியீட்டின் பெறுமதி,

(1) 4 (2) 3 (3) 1

(11) இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

(1) □ U ண △ R L = □ U ன △ R L (2) ⊤ ⌓ ↔ ச வ k = ⊤ ⌓ ↔ க வ k

(3) ⊕ ய Z வ R ⌛ = ⊕ ய Z வ R ⌛

(12) 

இந்நான்முகி புள்ளிக்கோட்டின் வழியே இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டது. அவ்விரண்டு துண்டுகளிலும் இருக்கும் முகங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 9 (2) 8 (3) 10

(13) சரியான கோவையைத் தெரிவு செய்க.

(1) $555 + 55 + 55 + 55 + 5 = 715$ (2) $555 + 55 + 55 + 5 + 5 = 675$ (3) $555 + 55 + 5 + 5 + 5 = 635$

(14) 80 இன் அரைவாசியின் $\frac{1}{4}$ உடன் 7 ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண்,

(1) 27 (2) 32 (3) 17

(15) அடுத்தடுத்து வரும் இரண்டு வருடங்களின் அடுத்தடுத்து வரும் மாதங்களினுடைய நாட்களின் எண்ணிக்கைகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.


| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| 30 | 31 | 31 | 28 | 31 |

மேற்படி, அட்டவணையில் A யினால் காட்டப்பட்டுள்ள மாதமாக இருக்கக்கூடியது,

(1) நவம்பர் (2) செப்டெம்பர் (3) ஏப்ரல்

(16) பிள்ளையொன்று மேற்குத் திசைக்கு நடந்து செல்லும்போது அப்பிள்ளையின் நிழல் அப்பிள்ளையின் முன்பக்கம் விழுந்திருந்தது. அதன்படி, அப்பிள்ளை பயணித்த வேளை,

(1) மாலை வேளை (2) காலை வேளை (3) கூறமுடியாது

(17) 


இவ்வுரு ஒரேயளவான சதுர வடிவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின்,

(1) $\frac{3}{6}$ பங்காகும். (2) $\frac{4}{6}$ பங்காகும். (3) $\frac{3}{5}$ பங்காகும்.


(18) M எனும் எண்ணிலிருந்து 7 ஐக் கழிக்கும்போது விடை 29 ஆகும். அதன்படி, M எனும் எண்ணுடன் 7 ஐக் கூட்டினால் கிடைக்கும் விடை,

(1) 38 (2) 43 (3) 40

(19) பின்வரும் உருக்களை ஏதோவொரு கோலத்திற்கேற்ப மீண்டும் ஒழுங்குபடுத்தும்போது நடுவில் வரும் உருவைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.





(1) C (2) B (3) E

(20) 

செவ்வக வடிவக் காணியொன்றின் இரண்டு பக்கங்களில் கம்பித்தூண்கள் நடப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, மொத்தக் காணியையும் சுற்றி இம்முறையில் கம்பித்தூண்களை நடுவதற்கு இன்னும் தேவைப்படும் கம்பித்தூண்களின் எண்ணிக்கை,

(1) 6 (2) 5 (3) 7

kalvi.lk

(21) 


இவ்வினாவில் உள்ள இரு குறியீடுகளும் 10 இற்கும் குறைந்த இலக்கங்களைக் காட்டுகின்றன. அதன்படி

 - இக்குறியீட்டின் பெறுமதி,

(1) 7 (2) 6 (3) 4

(22) பின்வரும் உரையாடலை வாசிக்குக.

**A** :- ஏன் அண்ணா தாத்தாவின் வீட்டிற்குச் சென்றார் அம்மா?

**B** :- அம்மா, அண்ணா எங்கே சென்றார்?


**C** :- மாம்பழம் கொண்டு வருவதற்கு மகனே.

**D** :- தாத்தாவின் வீட்டிற்குச் சென்றுள்ளான் மகனே.

**E** :- அப்படியென்றால் எங்களுக்கு இன்று மாம்பழம் சாப்பிட முடியும்.


இவ்வுரையாடலை ஒழுங்குமுறைப்படுத்தினால்,

(1) B, D, A, C, E (2) A, D, E, B, C (3) D, B, E, C, A




(23) 



உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையானதாகும். அதன்படி, A இன் நிறை,

(1) 5kg (2) 10kg (3) 7kg

(24) 

அருகே காட்டப்பட்டுள்ள முறையில் துளைகள் இடப்பட்டுள்ள கார்ட்போர்ட் துண்டைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டிய பின் கிடைக்கும் தாயக்கட்டையைக் காட்டும் உரு,

(1)  (2)  (3) 

(25) 


இவ்வுருவிலுள்ள P, Q ஆகிய இரு ஆங்கில எழுத்துகளுக்கும் வரவேண்டிய இரு எண்களில் ஒன்று மற்றையதன் இரண்டு மடங்காகும். உருவிலுள்ள நான்கு எண்களினதும் கூட்டுத்தொகை 24 ஆகும். அதன்படி, P, Q ஆகிய ஆங்கில எழுத்துகளுக்குரிய எண்கள் முறையே,

(1) P - 2 , Q - 4 (2) P - 3 , Q - 6 (3) P - 5 , Q - 4

(26) ஒரு மாதத்தில் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்கள் 5 வீதம் உள்ளன. அதன்படி, அம்மாதமாக இருக்கக்கூடியது,


(1) ஏப்ரல் (2) பெப்ரவரி (3) ஒக்டோபர்

(27) குறித்த வீதியொன்றில் நீலம், பச்சை, சிவப்பு, நீலம், பச்சை, சிவப்பு, ...... என்னும் ஒழுங்கில் கொடிகள் நடப்பட்டுள்ளன. முதலாவது கொடி நீல நிறமாகும். அதன்படி, 26 ஆவது கொடியின் நிறம்,

(1) பச்சை (2) நீலம் (3) சிவப்பு


(28) IV தொடக்கம் X வரையுள்ள உரோம எண்குறிகளை எழுதும்போது எழுதப்படும் உரோம எண்குறி "I" இன் எண்ணிக்கை,

(1) 7 (2) 9 (3) 8

(29) 


அருகே P, Q, R ஆகிய ஒவ்வொரு அடைப்பிலும் உள்ள மிகச்சிறிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்,

(1) 435 (2) 432 (3) 523

(30) 

இத்திண்மத்திலுள்ள முகங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 7 (2) 6 (3) 8

kalvi.lk

(31)


| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 9 | 7 | 9 | 5 | 9 | 7 | 5 | 9 | 8 |

மேலேயுள்ள இலக்கங்களின் வரிசையில் இரண்டு தடவைகள் மாத்திரம் எழுதப்பட்டுள்ள இலக்கம்,

(1) 5 (2) 8 (3) 7


(32) ஒரு வரிசையில் மீனாவிற்கு முன்னால் 6 பிள்ளைகளும் மீனாவிற்குப் பின்னால் 9 பிள்ளைகளும் நின்று கொண்டிருந்தனர். அவ்வரிசையில் இன்னும் ஒரு பிள்ளை இணைந்துக்கொண்டால் வரிசையில் நிற்கும் மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 16 (2) 17 (3) 18

(33) 

சதுர வடிவக் கடதாசியொன்றைப் பல தடவைகள் மடித்து விரித்தபோது மடிக்கப்பட்ட அடையாளங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, அச்சதுர வடிவக் கடதாசி மடிக்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை,

(1) 3 (2) 4 (3) 6

(34) 

இப்பெரிய சதுரமுகியைப் புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டுவதனால் கிடைக்கும் சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 26 (2) 32 (3) 27

(35) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

நதியில் நீச்சல் அடித்திடுமே!
நாக்கால் பூச்சி பிடித்திடுமே!
அதிகம் பேசி ஆடிடுமே!
அழிவை அதுவே தேடிடுமே!


இப்பாடலில் வர்ணிக்கப்படும் பிராணி,


(1) மீன் (2) தவளை (3) முதலை


(36) தினசரி செய்தித்தாளில் குறைவாகக் காணப்படுவது,


(1) வாக்கியங்கள் (2) சொற்கள் (3) எழுத்துக்கள்


(37) முதலில் தரப்பட்டுள்ள அடைப்பினுள் உள்ள சகல வடிவங்களையும் கொண்ட அடைப்பை தெரிவு செய்க.



(1) 


(2) 

(3) 

(38) 

இவ்வுருவில் காணக்கிடைக்கும் முக்கோணங்களின் எண்ணிக்கை,

(1) 5 (2) 3 (3) 4

(39) 


இக்கடிகாரத்தின் நேரம் மணித்தியாலத்திற்கு 5 நிமிடங்கள் கூடுதலாகச் செல்லும். அதன்படி, இன்னும் 1 மணித்தியாலத்தின் பின் இக்கடிகார முகம் காட்டும் நேரம்,

(1) 10.05 (2) 10.00 (3) 9.55

(40) எங்கள் வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் உயரமானவர்கள். பைசர் உயரமான மாணவனாவான். அதன்படி, பைசர் எங்கள் வகுப்பிலுள்ள மாணவனாவான். இக்கூற்று,

kalvi.lk

(1) சரியானது (2) தவறானது (3) கூறமுடியாது

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தெரிவுசெய்வதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022
தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-02
# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..............................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
- **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.**
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- **விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- **செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

---

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

அழகை அனைவரும் விரும்புகின்றோம். நாம் வாழும் வீடு அழகாக இருக்க வேண்டும். அழகுக்கு மேலும் அழகு தருவது தொட்டிகளில் வளர்க்கப்படும் வண்ண வண்ண மீன்களே! சுறுசுறுப்பாக நீந்திச் செல்லும் மீன்கள் வற்றாத மகிழ்ச்சியை எமக்கு தருகின்றன.

(i) இப்பந்தியில் குறிப்பிடப்படும் பிராணி எது? ..........................................................................................

(ii) விசிறியும் சுழியும் வந்துள்ள சொல் எது? ..........................................................................................

(iii) மீன்களே! என்பதில் வந்துள்ள நிறுத்தற் குறியீட்டை எழுதுக. ..........................................................................................

(iv) இப்பந்தியில் வந்துள்ள தன்மைப் பன்மைச்சொல் ஒன்றை எழுதுக. ..........................................................................................

(v) "சுறுசுறுப்பு" என்பதன் எதிர்க்கருத்தினை எழுதுக. ..........................................................................................

**(02) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) ஒருவர் / ஒரு பொருள் தானே தன் கதையைக் கூறுவது :- ..........................................................................................

(ii) அரசன் , ஆசிரியர் , தந்தை , தாய் , தமையன் ஆகியோர் :- ..........................................................................................

**(03) பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியீடுகளை இடுக.**

கடித மேலுறையில் அனுப்புபவரின் பெயர் வீட்டு எண் வீதியின் பெயர் ஊரின் பெயர் நகரம் ஆகியவற்றை எழுதுக

**(04) அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) பாடசாலை விடுமுறையின்போது மாமா எங்களை மிருகங்களை பாதுகாக்கும் ............................ (சரணாழயம் , சரணாளயம் , சரணாலயம்) பார்க்க அழைத்துச் செல்வார்.

(ii) ஒருவர் தமது ............................ (முயற்சி , முயர்ச்சி , முயற்ச்சி ) மூலம் எந்த இலக்கையும் அடைய முடியும்.

**(05) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( X ) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) "அவள்" என்பது உயர்திணை, பெண்பால், தன்மை, ஒருமை சொல்லாகும். (   )

(ii) "நான்" என்பது உயர்திணை, ஆண்பால், தன்மை, ஒருமை சொல்லாகும். (   )

**(06) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

(i) சுகம் + துக்கம் :- ........................................................ (ii) பல் + பசை :- ........................................................

**(07) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.**

(i) இ. மி. ச. :- ........................................................ (ii) இ. ரூ. கூ. :- ........................................................

**(08) கீழே தரப்பட்டுள்ள பெண்பாற் சொற்களுக்குப் பொருத்தமான ஆண்பாற் சொற்களைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) வேடுவிச்சி :- ........................................................ (ii) திருடி :- ........................................................

**(09) கீழே தரப்பட்டுள்ள எதிர்கால வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.**

கமலன் பாடம் படிப்பான் :- ..........................................................................................

**(10) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான இணைமொழியை கூட்டினுள் இருந்து தெரிவுசெய்து உரிய வெற்றிடங்களில் எழுதுக.**

| கரடு முரடான, | தடல் புடலாக, | ஏட்டிக்குப் போட்டியாக |
|---|---|---|

(i) பண்டிகைக்கான ஏற்பாடுகள் ........................................................ நடைபெறுகின்றன.

kalvi.lk

(ii) பிறருடன் ................................................ பேசும்போது நமது நற்பெயர் பாதிப்படையும்.

(iii) ................................................ பாதைகள் மூலம் பயணிப்பது ஆபத்தை விளைவிக்கக் கூடும்.

**(11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) I am .................... ( a / an ) elephant. (ii) I live ............................ ( in / on ) Anuradhapura.

**(12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) What's your name ? ........................................ (ii) Are you ready ?........................................

**(13) தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**


(i) Tail :- ........................................ (ii) Flowers :- ........................................

**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

போலய தென்න :- ................................................................................


**(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக,**

காகம் கறுப்பு நிறம் :- ................................................................................


(16) (i) 


"மூவாயிரத்து இருபத்து நான்கு" என்பதை இவ்வெண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.

(ii) 6709 இற்குப் பின்னுள்ள எண்ணைச் சொற்களில் எழுதுக. ................................................................


(17) 


நேரம் " 6 மணி கடந்து 45 நிமிடம் " அருகேயுள்ள கடிகார முகத்தில் வரைந்துக் காட்டுக.

(18) 

இவ்வுருவில் வட்டமொன்றும் சதுரமொன்றும் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வுருவின் சமச்சீர் அச்சுக்களை வரைந்துக் காட்டுக.

(19) 159 சவர்க்காரக் கட்டிகள் ஒரு பெட்டியில் 4 வீதம் அடுக்கப்பட்டன. அதன்படி, 4 சவர்க்காரக் கட்டிகள் வீதம் அடுக்கப்பட்டுள்ள பெட்டிகளின் எண்ணிக்கை யாது? ................................................................

(20) 


இவ்வுருவின்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

(i) பந்து இருப்பது புத்தகத்திற்கு எத்திசையிலாகும்? ........................................

(ii) கோப்பை இருப்பது பேனைக்கு எத்திசையிலாகும்? ........................................

(21) 

மேலே ஒரேயளவான முக்கோண வடிவக் கார்ட்போர்ட் அட்டைகள் சில உள்ளன. அக்கார்ட்போர்ட் அட்டைகளைப் பயன்படுத்தி நான்முகியொன்றை அமைத்துக்கொண்டதன் பின் எஞ்சியிருக்கும் கார்ட்போர்ட் அட்டைகளின் எண்ணிக்கை யாது? ........................................

(22) i , iii , v , vii , [ ] இவ் உரோம எண்குறிகள் எழுதப்பட்டுள்ள எண்கோலத்தில் அடுத்து வரவேண்டிய எண்ணை வெற்றுக்கூட்டினுள் எழுதுக.

(23) பெட்டியொன்றிலுள்ள முட்டைகளின் மொத்த எண்ணிக்கை 3743 ஆகும். அவற்றில் 1538 முட்டைகள் வெள்ளை முட்டைகளாகும். அதன்படி, பெட்டியிலுள்ள சிவப்பு முட்டைகளின் எண்ணிக்கை யாது? ................................

(24) சதுரமுகியொன்றின் விளிம்புகளின் எண்ணிக்கை அதன் உச்சிகளின் எண்ணிக்கையை விட எத்தனை அதிகமானதாகும்?

........................................

(25) 5m நீளமுள்ள கம்பியொன்றிலிருந்து,

(i) 60cm நீளமுள்ள எத்தனை கம்பித்துண்டுகளை வெட்டலாம்? ................................

(ii) மீதமாக இருக்கும் கம்பித்துண்டின் நீளம் யாது? ................................

kalvi.lk

(26) (i) கீழே தரப்பட்டுள்ள சிட்டையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக. சுட்டெண்:-..........................................


| | பொருட்களின் வகைகள் | ஒன்றின் விலை (ரூபாய்) | கொள்வனவு செய்த அளவுகள் | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபாய் | சதம் |
| (1) | பென்சில் | 8.00 | 6 | .............. | .............. |
| (2) | பேனை | .............. | 4 | 60 | 00 |
| (3) | புத்தகம் | 25.00 | 3 | .............. | .............. |
| (4) | | | மொத்தம் | .............. | .............. |

(ii) மேலேயுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்த பின் வியாபாரிக்கு ரூபாய் 50.00 நாணயத் தாள்கள் 4 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ..........................................


(27) (i) $3l\ 700ml$ ஔடத எண்ணெயை $500ml$ கொண்ட எத்தனை போத்தல்களுக்கு இட முடியும்? ..........................................

(ii) போத்தல்களில் ஔடத எண்ணெயை இட்டதன் பின்னர் எஞ்சியிருக்கும் எண்ணெயின் அளவு யாது? ..................

(28)




மேலே A, B ஆகிய இரு பென்சில்களினதும் நீளங்கள் சென்ரிமீற்றர்களில் அளக்கப்பட்டன. அதன்படி, இரு பென்சில்களினதும் நீளங்களின் கூட்டுத்தொகை யாது? ..........................................................................

(29) 

இவ்வுருவில் சதுர வடிவமொன்று காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவின் $\frac{3}{4}$ ஐ நிழற்றிக் காட்டுக.

**✱ இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) கிராமிய விளையாட்டொன்று,
(1) சடுகுடு (2) வலைப்பந்து (3) சதுரங்கம்

(31) பத்துக் கால்களை உடைய பிராணி,
(1) சிலந்தி (2) தேள் (3) நண்டு


(32) பாதங்களில் குளம்புகளைக் கொண்டிராத பிராணி,
(1) எருது (2) புலி (3) குதிரை

(33) இறப்பர் தாவரம் வளர்க்கப்படுவதற்கான பிரதான காரணம்,
(1) பாலைப் பெற்றுக்கொள்வதற்காகும். (2) விறகைப் பெற்றுக்கொள்வதற்காகும். (3) மருந்தைப் பெற்றுக்கொள்வதற்காகும்.

(34) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள பூச்சியின் உடலின் நிறம்,
(1) கறுப்பு (2) சிவப்பு (3) பச்சை

(35) நன்நடத்தைச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ள நாம் செல்ல வேண்டியது,
(1) கிராம சேவகர் காரியாலயத்திற்கு (2) தபால் நிலையத்திற்கு (3) வைத்தியசாலையிற்கு

(36) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள சங்கீத உபகரணம்,
(1) தம்பட்டம் (2) தவில் (3) உடுக்கை

(37) "கழுகு" தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) கழுகு கூர்மையான கண்களையுடைய பறவையாகும். (2) கழுகு வானில் மிக உயரத்தில் பறக்கின்ற பறவையாகும்.
(3) கழுகு தாவர உண்ணிப் பறவையாகும்.

(38) "சீகிரியா" மிகவும் புகழ்பெற்று விளங்குவது,
(1) சுவரோவியங்களுக்காகவாகும். (2) மரச் செதுக்கல்களுக்காகவாகும். (3) கல்வேலைகளுக்காகவாகும்.

(39) அமாவாசைத் தினத்திலிருந்து பூரண பௌர்ணமி தினம் வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை,
(1) 7 (2) 14 (3) 12

(40) "கைவில்லை" பயன்படுத்தப்படுவது,
(1) சிறிய பொருட்களைப் பெரிதாக்கிப் பார்ப்பதற்கு (2) திசைகளை இலகுவாக அறிவதற்கு
(3) உடலின் வெப்பநிலையை அளப்பதற்கு

(41) அஞ்சல் ஓட்டப் போட்டியில் இரண்டாவது கட்டளை,
(1) ஓடு (2) குறிப்பிற்குச் செல் (3) ஆயத்தமாகு

kalvi.lk

(42) உணவு சமைக்கும்போது உணவைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படாத தாவர இலை,

(1) ரம்பை (2) கறுவா (3) கறிவேப்பிலை

(43) ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கத்தை வென்ற இலங்கையின் முதல் விளையாட்டு வீரர்,

(1) டங்கன் வைட் (2) சுசந்திகா ஜயசிங்க (3) முத்தையா முரளிதரன்

(44) அண்மையில் உலகம் முழுவதிலும் வேகமாகப் பரவிய தொற்று நோயொன்று,

(1) டெங்கு (2) கொவிட்-19 (3) மலேரியா

(45) இலங்கையில் கடலோரத்தில் அமைந்துள்ள மாகாணங்களின் எண்ணிக்கை,

(1) 6 (2) 4 (3) 5

(46) விற்றமின்கள் , கனியுப்புக்கள் அடங்கிய உணவுகளின் மூலம்,

(1) நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறலாம். (2) உடல் வளர்ச்சியடையும்.

(3) உடலுக்கு தேவையான சக்தி கிடைக்கும்.




(47) பயிர் செய்கைக்குத் தீங்கு விளைவிக்கும் பிராணி,

(1) மண்புழு (2) மயிர்க்கொட்டி (3) வண்ணத்துப்பூச்சி

(48) பௌர்ணமி தினத்தில் எம்மால் காணக்கூடியது,

(1) சந்திர கிரகணம் (2) சூரிய கிரகணம் (3) வானவில்

(49) சட்டக்காந்தத்தில் இரும்புத் தூள்கள் கவரப்பட்டுள்ள விதத்தைச் சரியாகக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(50) நீல நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் ஒன்றையொன்று கலப்பதனால் கிடைக்கும் வர்ணம்,


(1) ஊதா (2) பச்சை (3) செம்மஞ்சள்

(51) வாள், கத்தி போன்றவற்றைக் கூராக்குவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்,

(1) அரம் (2) சீவுளி (3) வாச்சு

(52) "களிமண்ணை விட மணல் மண் நன்றாக நீரை உறிஞ்சிக்கொள்ளும்" இக்கூற்று,

(1) தவறானது (2) சரியானது (3) கூற முடியாது.

(53)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள பிராணி,

(1) தும்பி (2) வெட்டுக்கிளி (3) குளவி

(54) நுளம்புகள் எமது அருகில் வருவதைத் தவிர்ப்பதற்கு உடலுக்குப் பூசப்படுவது,

(1) தேங்காயெண்ணெய் (2) வினாகிரி (3) புல்லெண்ணெய்




(55) வெள்ளை நிறப் பூக்கள் பெரும்பாலும் பூப்பது,

(1) இரவு வேளையில் (2) பகல் வேளையில் (3) காலை வேளையில்

(56) தொலைக்காட்சியில் நாம் தகவல்களைப் பெற்றுக்கொள்வது,

(1) காதுகளின் மூலம் மட்டும் (2) கண்கள், காதுகள் மூலம் (3) கண்களின் மூலம் மட்டும்

(57) காற்றின் திசையை அறிவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்,

(1)  (2)  (3) 

(58) இலங்கை பிரிக்கப்பட்டுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை,

(1) 9 (2) 25 (3) 12

(59) மழைக்குருவி தனது இருப்பிடத்தை அமைத்துக்கொள்வது,

(1) தாவர இலைகளின் மூலம் (2) தனது சொண்டினால் மரத்தண்டுகளில் பொந்துகளை அமைப்பதன் மூலம்

(3) களிமண் மூலம்

**(60) "வேகமாகக் காற்று வீசியது. மரங்கள் அங்குமிங்கும் அசைந்து ஆடின. வானம் இருண்டு மேகக் கூட்டங்களால் நிறைந்துவிட்டது..............." இதன் பின்னர் நிகழ்வதாக நீர் கருதும் விடயங்களை மூன்று வாக்கியங்களில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..........................................................................................................................................................

(2) ..........................................................................................................................................................

(3) ..........................................................................................................................................................

kalvi.lk